<u>சுருக்கம்</u>

திட்டங்கள் – மாநிலத் திட்டம் - சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (2023-24) – 211 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலக கட்டடங்களில் கூடுதலாக இ-சேவை மையத்திற்கான அறை, பார்வையாளர்கள் காத்திருப்போர் கொட்டகை மற்றும் கணினி அறை ஆகியவற்றை நடப்பு நிதியாண்டில் 2023-24-ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒரு தொகுதிக்கு ரூ.21 இலட்சம் வீதம் மொத்த தொகையான ரூ.4431.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு சிறப்பு அனுமதி அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி-1) துறை</u>

அரசாணை(நிலை) எண்.138

நாள்: 17.11.2023
சோபகிருது, கார்த்திகை 1–ந்தேதி
திருவள்ளுவர் ஆண்டு 2054
படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.98, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி-1) துறை, நாள் 19.07.2023.
2. அரசாணை(நிலை) எண்.120, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி-1) துறை, நாள் 29.09.2023.

மேலும் படிக்கப்பட்டவை:

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.58951/2021/சி.டி.எஸ்-2, நாள் 11.04.2023.
4. பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை-5 அவர்களின் கடித எண்.உ.செ.பொ-டி1/157945/2023, நாள் 28.06.2023 மற்றும் 19.07.2023.

----

<u>ஆணை:</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2023-24-ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ரூ.3 கோடி வீதம்

(த.பி.பா)

ரூ.702 கோடிக்கு நிர்வாக அனுமதியும், அதில் 50 சதவீத தொகையான ரூ.351 கோடிக்கு நிதி விடுவிப்பும் செய்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2023-24-ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மொத்த நிர்வாக அனுமதி ரூ.702 கோடியில், 50 சதவீதமான ரூ.351 கோடி முதல் தவணைத் தொகையாக விடுவிக்கப்பட்டது போக மீதமுள்ள இரண்டாவது மற்றும் இறுதி தவணைத் தொகை ரூ.351 கோடி நிதி விடுவிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. சட்டமன்றப் பேரவைச் செயலக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்டமன்றப் பேரவைச் செயலக ஆணை (வாலாயம்) எண்.638 நாள் 25.10.1999-ன்படி புதிய சட்டமன்ற தொகுதி அலுவலகங்களை 710 சதுர அடியில் கட்டுவதற்கான செலவினத்தை மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடலாம் எனவும், மேலும், ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி அலுவலகங்கள் கட்டப்பட்டு, பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ள கட்டடங்களில் கட்டடம் மற்றும் மின் சம்மந்தமான சிறப்புப் பராமரிப்புப் பணிகள், இ-சேவை மையத்திற்கான அறை, பார்வையாளர்கள் காத்திருப்போர் கொட்டகை மற்றும் கணினி அறை ஆகியவற்றை கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள ஆணைகள் வெளியிடும் பொருட்டு அரசு கொள்கை முடிவு எடுக்க உரிய நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளித்திருந்தார்.

4. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்கள், மேலே பத்தி மூன்றில் காணும் சட்டமன்றப் பேரவை செயலகத்தின் கருத்துரு தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய பணிகளின் விவரம் மற்றும் அதற்கான மதிப்பீட்டினை பொதுப்பணித் துறையிடமிருந்து பெற்ற பின்னர், 2023-24-ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் வழிகாட்டி நெறிமுறைகளில் உரிய திருத்தம் மேற்கொண்டு ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி அலுவலகங்கள் கட்டப்பட்டு, பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ள 211 கட்டடங்களில் கட்டடம்

மற்றும் மின் சம்மந்தமான சிறப்புப் பராமரிப்புப் பணிகள், இ-சேவை மையத்திற்கான அறை, பார்வையாளர்கள் காத்திருப்போர் கொட்டகை மற்றும் கணினி அறை ஆகியவற்றை கட்டுவதற்கு ஒருமுறை மட்டும் அனுமதிக்கலாம் என தெரிவித்திருந்தார்.

5. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதங்களில், பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை-5 அவர்கள் ஏற்கனவே பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் 211 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலக கட்டடங்களில் கூடுதலாக இ-சேவை மையத்திற்கான அறை, பார்வையாளர்கள் காத்திருப்போர் கொட்டகை மற்றும் கணினி அறை ஆகியவற்றை ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கான மதிப்பீட்டு அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருந்தார்.

6. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட 2023-24 – ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில், சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகளைத் தவிர எந்தப் பணிகளையும் எடுத்து செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பத்தி எண்.5ல் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:-

> 5. எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்
>
> சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பின்வரும் தடை செய்யப்பட்ட பணிகளை மேற்கொள்ளல் கூடாது. அவற்றுள் விதிவிலக்காக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளை விதிமுறைகளின்படி மேற்கொள்ளலாம்.
>
> 5.1 மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளைச் சார்ந்த கூட்டுறவு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றிற்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

5.2 தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் அவற்றிற்கு அனைத்து வகையான புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

விதிவிலக்குகள்:

i. நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த பால் குளிரூட்டும் மைய (Bulk Milk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல்.

ii. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர், சிமெண்ட் கான்கிரீட் தளம், தொழிலாளர் ஓய்வறை மற்றும் கழிவறை கட்டுதல்.

iii. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்.

iv. அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2000 வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு / தாட்கோ மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000-திற்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல், ஆண்டிற்கு அதிகபட்சம் ரூ.30 லட்சம் (சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் 10%) செலவிடலாம். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக் கொள்ளும் முன்னர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை / தாட்கோ நிறுவனம் / தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

7. மேலே பத்தி 3-ல் காணும் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, ஏற்கனவே பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் இணைப்பில் உள்ள 211 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலக கட்டடங்களில் கூடுதலாக இ-சேவை மையத்திற்கான அறை, பார்வையாளர்கள் காத்திருப்போர் கொட்டகை மற்றும் கணினி அறை ஆகிய 3 பணிகளையும் சேர்த்து 2000 சதுர அடி பரப்புக்கு மிகாமல் பொதுப்பணித் துறையின்

மதிப்பீட்டின்படி கட்டுவதற்கு ஒரு தொகுதிக்கு ரூ.21 இலட்சம் வீதம் மொத்த தொகையான ரூ.4431.00 இலட்சத்தை சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் 2023-24-ஆம் நிதியாண்டுக்கு அவரவர் தொகுதிக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.3 கோடியிருந்து நடப்பு நிதியாண்டிலேயே (2023-24) மேற்கொள்ள ஏதுவாக, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2023-24-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் பத்தி 5.1-ஐ மட்டும் தளர்த்தி, சிறப்பினமாகக் கருதி, இந்த ஒருமுறை மட்டும் இப்பணிகளை மேற்கொள்ள அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

8. இந்த ஆணை நிதித் துறையின் இ-கோப்பு அ.சா. எண்.2396/JS(RR)/2023, நாள் 16.11.2023-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் (இணைப்பில் உள்ளபடி)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
அரசு முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
செயலாளர்,தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
ஆணையர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை-108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை-35.
உறுப்பினர் / செயலர், மாநிலத் திட்ட ஆணையம், சென்னை-5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை-5
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமை செயலகம்), சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை-9.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்-III, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணித் துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
நிதி (வரவு-செலவு-I/வரவு-செலவு- II/(ஊ.வ) துறை, சென்னை- 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17-11-2023
பிரிவு அலுவலர்

17/11

(அரசாணை (நிலை) எண்.138, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.1) துறை, நாள் 17.11.2023)

## இணைப்பு

## ஏற்கனவே பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் 211 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலக கட்டடங்களின் விவரம்

| Sl. Nos. | Constituency No. | District | Constituency |
|---|---|---|---|
| 1 | 1 | Thiruvallur | Gummidipoondi |
| 2 | 2 | Thiruvallur | Ponneri |
| 3 | 3 | Thiruvallur | Tiruttani |
| 4 | 4 | Thiruvallur | Thiruvallur |
| 5 | 5 | Thiruvallur | Poonmallae |
| 6 | 6 | Thiruvallur | Avadi |
| 7 | 7 | Thiruvallur | Maduravoyal |
| 8 | 8 | Thiruvallur | Ambattur |
| 9 | 9 | Thiruvallur | Madavaram |
| 10 | 11 | Chennai | Dr.Radhakrishnan Nagar |
| 11 | 12 | Chennai | Perambur |
| 12 | 17 | Chennai | Royapuram |
| 13 | 18 | Chennai | Harbour |
| 14 | 20 | Chennai | Thousand Lights |
| 15 | 21 | Chennai | Anna Nagar |
| 16 | 24 | Chennai | Thiyagarayanagar |
| 17 | 27 | Chengalpattu | Shozhinganallur |
| 18 | 28 | Kancheepuram | Alandur |
| 19 | 31 | Chengalpattu | Tambaram |
| 20 | 32 | Chengalpattu | Chengalpattu |
| 21 | 33 | Chengalpattu | Thiruporur |
| 22 | 34 | Chengalpattu | Cheyyur |
| 23 | 35 | Chengalpattu | Madurantakam |
| 24 | 36 | Kancheepuram | Uthiramerur |
| 25 | 37 | Kancheepuram | Kancheepuram |
| 26 | 38 | Ranipet | Arakkonam |

| | | | |
|---|---|---|---|
| 27 | 39 | Ranipet | Sholingur |
| 28 | 40 | Vellore | Katpadi |
| 29 | 41 | Ranipet | Ranipet |
| 30 | 42 | Ranipet | Arcot |
| 31 | 43 | Vellore | Vellore |
| 32 | 44 | Vellore | Anaikattu |
| 33 | 45 | Vellore | Kilvaithinankuppam |
| 34 | 46 | Vellore | Gudiyattam |
| 35 | 47 | Tirupattur | Vaniyambadi |
| 36 | 49 | Tirupattur | Jolarpet |
| 37 | 50 | Tirupattur | Tirupattur |
| 38 | 51 | Krishnagiri | Uthangarai |
| 39 | 52 | Krishnagiri | Bargur |
| 40 | 53 | Krishnagiri | Krishnagiri |
| 41 | 54 | Krishnagiri | Veppanahalli |
| 42 | 55 | Krishnagiri | Hosur |
| 43 | 56 | Krishnagiri | Thalli |
| 44 | 57 | Dharmapuri | Palacodu |
| 45 | 58 | Dharmapuri | Pennagaram |
| 46 | 59 | Dharmapuri | Dharmapuri |
| 47 | 60 | Dharmapuri | Pappireddippatti |
| 48 | 61 | Dharmapuri | Harur |
| 49 | 62 | Thiruvannamalai | Chengam |
| 50 | 63 | Thiruvannamalai | Tiruvannamalai |
| 51 | 64 | Thiruvannamalai | Kilpennathur |
| 52 | 65 | Thiruvannamalai | Kalasapakkam |
| 53 | 66 | Thiruvannamalai | Polur |
| 54 | 67 | Thiruvannamalai | Arani |
| 55 | 68 | Thiruvannamalai | Cheyyar |
| 56 | 69 | Thiruvannamalai | Vandavasi |
| 57 | 70 | Villupuram | Gingee |
| 58 | 71 | Villupuram | Mailam |
| 59 | 72 | Villupuram | Tindivanam |
| 60 | 73 | Villupuram | Vanur |

| | | | |
|---|---|---|---|
| 61 | 74 | Villupuram | Villupuram |
| 62 | 75 | Villupuram | Vikravandi |
| 63 | 76 | Villupuram | Tirukkoyilur |
| 64 | 77 | Kallakurichi | Ulundurpettai |
| 65 | 78 | Kallakurichi | Rishivandiyam |
| 66 | 79 | Kallakurichi | Sankarapuram |
| 67 | 80 | Kallakurichi | Kallakurichi |
| 68 | 81 | Salem | Gangavalli |
| 69 | 82 | Salem | Attur |
| 70 | 83 | Salem | Yercaud |
| 71 | 84 | Salem | Omalur |
| 72 | 85 | Salem | Mettur |
| 73 | 86 | Salem | Edappadi |
| 74 | 87 | Salem | Sankari |
| 75 | 88 | Salem | Salem (West) |
| 76 | 90 | Salem | Salem (South) |
| 77 | 91 | Salem | Veerapandi |
| 78 | 92 | Namakkal | Rasipuram |
| 79 | 93 | Namakkal | Senthamangalam |
| 80 | 94 | Namakkal | Namakkal |
| 81 | 95 | Namakkal | Paramathi-Velur |
| 82 | 96 | Namakkal | Tiruchengodu |
| 83 | 97 | Namakkal | Kumarapalayam |
| 84 | 98 | Erode | Erode (East) |
| 85 | 99 | Erode | Erode (West) |
| 86 | 100 | Erode | Modakkurichi |
| 87 | 101 | Tiruppur | Dharapuram |
| 88 | 103 | Erode | Perundurai |
| 89 | 104 | Erode | Bhavani |
| 90 | 105 | Erode | Anthiyur |
| 91 | 106 | Erode | Gobichettipalayam |
| 92 | 107 | Erode | Bhavanisagar |
| 93 | 108 | Nilgiris | Udhagamandalam |
| 94 | 109 | Nilgiris | Gudalur |

| | | | |
|---|---|---|---|
| 95 | 110 | Nilgiris | Coonoor |
| 96 | 111 | Coimbatore | Mettuppalayam |
| 97 | 112 | Tiruppur | Avinashi |
| 98 | 113 | Tiruppur | Tiruppur (North) |
| 99 | 115 | Tiruppur | Palladam |
| 100 | 116 | Coimbatore | Sulur |
| 101 | 117 | Coimbatore | Kavundampalayam |
| 102 | 118 | Coimbatore | Coimbatore (North) |
| 103 | 119 | Coimbatore | Thondamuthur |
| 104 | 120 | Coimbatore | Coimbatore (South) |
| 105 | 121 | Coimbatore | Singanallur |
| 106 | 122 | Coimbatore | Kinathukadavu |
| 107 | 123 | Coimbatore | Pollachi |
| 108 | 125 | Tiruppur | Udumalaipettai |
| 109 | 126 | Tiruppur | Madathukulam |
| 110 | 127 | Dindigul | Palani |
| 111 | 128 | Dindigul | Oddanchatram |
| 112 | 129 | Dindigul | Athoor |
| 113 | 130 | Dindigul | Nilakkottai |
| 114 | 131 | Dindigul | Natham |
| 115 | 132 | Dindigul | Dindigul |
| 116 | 133 | Dindigul | Vedasandur |
| 117 | 135 | Karur | Karur |
| 118 | 137 | Karur | Kulithalai |
| 119 | 138 | Trichy | Manapparai |
| 120 | 139 | Trichy | Srirangam |
| 121 | 140 | Trichy | Tiruchirappalli (West) |
| 122 | 141 | Trichy | Tiruchirappalli (East) |
| 123 | 142 | Trichy | Thiruverumbur |
| 124 | 143 | Trichy | Lalgudi |
| 125 | 144 | Trichy | Manachanallur |
| 126 | 145 | Trichy | Musiri |
| 127 | 146 | Trichy | Thuraiyur |
| 128 | 147 | Perambalur | Perambalur |

| | | | |
|---|---|---|---|
| 129 | 148 | Perambalur | Kunnam |
| 130 | 149 | Ariyalur | Ariyalur |
| 131 | 150 | Ariyalur | Jayankondam |
| 132 | 151 | Cuddalore | Tittakudi |
| 133 | 152 | Cuddalore | Vriddhachalam |
| 134 | 153 | Cuddalore | Neyveli |
| 135 | 155 | Cuddalore | Cuddalore |
| 136 | 156 | Cuddalore | Kurinjipadi |
| 137 | 157 | Cuddalore | Bhuvanagiri |
| 138 | 158 | Cuddalore | Chidambaram |
| 139 | 159 | Cuddalore | Kattumannarkoil |
| 140 | 160 | Mayiladuthurai | Sirkazhi |
| 141 | 161 | Mayiladuthurai | Mayiladuthurai |
| 142 | 162 | Mayiladuthurai | Poombuhar |
| 143 | 163 | Nagapattinam | Nagapattinam |
| 144 | 164 | Nagapattinam | Kilvelur |
| 145 | 165 | Nagapattinam | Vedaranyam |
| 146 | 166 | Thiruvarur | Thiruthuraipoondi |
| 147 | 168 | Thiruvarur | Thiruvarur |
| 148 | 169 | Thiruvarur | Nannilam |
| 149 | 170 | Thanjavur | Thiruvidaimarudur |
| 150 | 171 | Thanjavur | Kumbakonam |
| 151 | 172 | Thanjavur | Papanasam |
| 152 | 173 | Thanjavur | Thiruvaiyaru |
| 153 | 174 | Thanjavur | Thanjavur |
| 154 | 175 | Thanjavur | Orathanadu |
| 155 | 176 | Thanjavur | Pattukkottai |
| 156 | 177 | Thanjavur | Peravurani |
| 157 | 178 | Pudukottai | Gandharvakottai |
| 158 | 179 | Pudukottai | Viralimalai |
| 159 | 180 | Pudukottai | Pudukkottai |
| 160 | 181 | Pudukottai | Thirumayam |
| 161 | 182 | Pudukottai | Alangudi |
| 162 | 183 | Pudukottai | Aranthangi |

| | | | |
|---|---|---|---|
| 163 | 184 | Sivagangai | Karaikudi |
| 164 | 185 | Sivagangai | Tiruppattur |
| 165 | 186 | Sivagangai | Sivaganga |
| 166 | 187 | Sivagangai | Manamadurai |
| 167 | 188 | Madurai | Melur |
| 168 | 189 | Madurai | Madurai East |
| 169 | 190 | Madurai | Sholavandan |
| 170 | 191 | Madurai | Madurai North |
| 171 | 192 | Madurai | Madurai South |
| 172 | 193 | Madurai | Madurai Central |
| 173 | 194 | Madurai | Madurai West |
| 174 | 196 | Madurai | Thirumangalam |
| 175 | 198 | Theni | Andipatti |
| 176 | 199 | Theni | Periyakulam |
| 177 | 200 | Theni | Bodinayakanur |
| 178 | 201 | Theni | Cumbum |
| 179 | 202 | Virudhunagar | Rajapalayam |
| 180 | 203 | Virudhunagar | Srivilliputhur |
| 181 | 204 | Virudhunagar | Sattur |
| 182 | 205 | Virudhunagar | Sivakasi |
| 183 | 206 | Virudhunagar | Virudhunagar |
| 184 | 207 | Virudhunagar | Aruppukkottai |
| 185 | 208 | Virudhunagar | Tiruchuli |
| 186 | 209 | Ramanathapuram | Paramakudi |
| 187 | 210 | Ramanathapuram | Tiruvadanai |
| 188 | 211 | Ramanathapuram | Ramanathapuram |
| 189 | 212 | Ramanathapuram | Mudhukulathur |
| 190 | 213 | Thoothukudi | Vilathikulam |
| 191 | 214 | Thoothukudi | Thoothukkudi |
| 192 | 215 | Thoothukudi | Tiruchendur |
| 193 | 216 | Thoothukudi | Srivaikuntam |
| 194 | 217 | Thoothukudi | Ottapidaram |
| 195 | 218 | Thoothukudi | Kovilpatti |
| 196 | 219 | Tenkasi | Sankarankovil |

| | | | |
|---|---|---|---|
| 197 | 220 | Tenkasi | Vasudevanallur |
| 198 | 221 | Tenkasi | Kadayanallur |
| 199 | 222 | Tenkasi | Tenkasi |
| 200 | 223 | Tenkasi | Alangulam |
| 201 | 224 | Thirunelveli | Tirunelveli |
| 202 | 225 | Thirunelveli | Ambasamudram |
| 203 | 226 | Thirunelveli | Palayamkottai |
| 204 | 227 | Thirunelveli | Nanguneri |
| 205 | 228 | Thirunelveli | Radhapuram |
| 206 | 229 | Kanyakumari | Kanniyakumari |
| 207 | 230 | Kanyakumari | Nagercoil |
| 208 | 231 | Kanyakumari | Colachal |
| 209 | 232 | Kanyakumari | Padmanabhapuram |
| 210 | 233 | Kanyakumari | Vilavancode |
| 211 | 234 | Kanyakumari | Killiyoor |

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

17-11-2023
பிரிவு அலுவலர்